# முத்தமிழாயம் வழங்கும் இலக்கியப்பதாகை (பறப்பு-5)




"வெற்றிகரமான சாதனைகளுக்கு
நான்கு அடிப்படை அம்சங்கள்
அவசியம் அவை இலக்கு நிர்ணயம்,
ஆக்கபூர்வமான சிந்தனை,
கற்பனைக் கண்ணோட்டம்,
நம்பிக்கை என நான்காகும்"

"கனவுகாணுங்கள், திட்டமிடுங்கள், செயல்படுங்கள்"

என எ.பி.ஜே.அப்துல்கலாமின் பொன்வரிகளுக்கு சொந்தக்காரர். திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார். அவரின் நினைவாக, விநாயகாமிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்குட்பட்ட ஆறுபடைவீடு தொழிற்நுட்ப வளாகம் - கலை மற்றும் அறிவியல் புலத்தின் சார்பில் ஐந்தாம் நிகழ்வாக ஆகஸ்ட் 24 ஆம் தேதி இலக்கியப் பதாகை பறப்பு– 5 நிகழ்வு நடந்தேறியது.



தமிழ்மொழி பல்வேறு தளங்களில் செயல்பட்டாலும், தொழில்நுட்ப அடிப்படையில் கணினி எவ்வாறு செயல்படுகிறது என்பதை, தமிழ்இணையம்-2018 என்ற தலைப்பில் முனைவர்.துரை.மணிகண்டன் அவர்கள் உரையாற்றினார். இணையத்தின் தோற்றம் வளர்ச்சி, தமிழ் இணைய வகைகள், தமிழ் இணையத்தை மாணவர்கள் எவ்வாறு சுயமாக தொடங்கவேண்டும், உலகநாடுகளில் தமிழ் இணையம் பெறும் இடம், இணையத்தில் தமிழின் முக்கியத்துவம், மின்னஞ்சலை தமிழில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அறியச் செய்து மாணவர்களை விழிப்புணர்வு அடையசெய்தார். முனைவர் மு.பொன்னவைக்கோ ஐயா, அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் இணையக் கல்விக் கழகம் பற்றி பல்வேறு கோணங்களில் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். யூ டு ப் வழி பணம் சம்பாதித்தல், மற்றும் மீம்ஸ் படைப்புத பற்றிய புள்ளிவிவரங்களை கொடுத்தார். புதியதமிழ் app களை தொடங்குவது பற்றியும் எடுத்துரைத்தார். மாணவர்களுக்கு இப்பயிலரங்கம் பயனுள்ளவகையில் அமைந்தது.

தமது வாழ்த்துக்களையும், ஆசிகளையும், ஆதரவையும் மேதகுடாக்டர் அ.ச.கணேசன் (வேந்தர்), டாக்டர் அனுராதாகணேசன் (இயக்குநர்) அவர்கள் அளித்தனர்.

தலைமை உரையினை முனைவர் மு.பொன்னவைக்கோ முதன்மை கல்வி அதிகாரி அவர்கள் வழங்கினார். முனைவர் ஆர்.சண்முகவள்ளி



இயக்குநர் கலைமற்றும் அறிவியல் புலம் அவர்கள் முன்னிலை வகித்துவாழ்த்தி பேசினார். முனைவர் துரை.மணிகண்டன் அவர்களை பற்றிய அறிமுக உரையினை, முனைவர் ப.ஜெயபாரதி (தமிழ்த்துறை தலைவர்) அவர்கள் வழங்கினார். வரவேற்புரையினை மாணவ தலைவர் சஞ்சனாவும், நன்றியுரையை மாணிக்கராமலட்சுமியும் வழங்கினர்.





தமிழ்த்துறைசார்பில் முனைவர் ப.ஜெயபாரதி (துறைத்தலைவர்), திரு.அ.முத்துக்குமார் (உதவிப்பேராசிரியர்) ஆகியோர் விழா ஏற்பாடு செய்துயிருந்தனர். இவ்விழா, மாணவமாணவிகள், அனைத்துதுறை சார்ந்த பேராசிரியர்கள், மற்றும் அலுவலக ஊழியர்களின் நல் ஆதரவுடன் இனிதே நடைபெற்றது.

~~~~~*****~~~~~
~~~~~